**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

C 8097151

1. District : மாவட்டம் நாகப்பட்டினம் | PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு | Year: ஆண்டு 2018 | FIR No.: மு.த.அ. எண் 01/18 | Date: நாள் 20.04.18

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 | Sections பிரிவுகள்: u/s 7.

(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 11.4.18 | Date to : நாள் வரை 19.04.18

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் [illegible] | Time to : நேரம் வரை [illegible]

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.4.18 | Time : நேரம் 18.00 hr

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கம்ப்யூட்டர் டைப் செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் மேற்கு 70 km தொலைவு.

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி அனைத்து மகளிர் காவல் நிலையம், மயிலாடுதுறை.

(c) In case outside limit of this Police Station, then the Name of P S இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. சேகர் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ரங்கநாதன்.

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் விவசாயம் | (g) Address : முகவரி 1/8 சிவன் கோயில் தெரு, [illegible], குத்தாலம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

[illegible], காவல் ஆய்வாளர், அனைத்து மகளிர் காவல் நிலையம், மயிலாடுதுறை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

— இல்லை -

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு — இல்லை -

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் — இல்லை -

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

அனுப்புநர்: R. குகன் த/பெ.ரெகுநாதன், 1/8, சிவன்தெற்கு வீதி, தேரிழந்தூர் & அஞ்சல், குத்தாலம் தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம். செல்:9994842944 பெறுநர்: உயர்திரு.காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, நாகப்பட்டினம். ஐயா, நான் தேரிழந்தூர், சிவன் தெற்கு தெருவில் குடும்பத்துடன் வசித்துவருகிறேன். B.sc., கணிதம் படித்துள்ளேன். வெளிநாட்டில் வேலை செய்துவிட்டு, தற்போது ஊரில் விவசாயம் செய்து வருகிறேன். என் உடன்பிறந்த தம்பி செந்திலுக்கும் காரைக்காலைச் சேர்ந்த திருமதி.கலாவதி க/பெ ராமலிங்கதேவர் என்பவர்களின் மகள் ராஜலெட்சுமிக்கும் கடந்த 2016-ல் திருமணம் நடந்தது. அனைவரும் கூட்டு குடும்பமாக இருந்தோம். ராஜலெட்சுமிக்கு ஆண் குழந்தை பிறந்து பெயர் சூட்டும் விழா 30.11.2017-ம்தேதி முடிந்து அன்று மாலை அவரது அம்மா வீட்டிற்கு போனவர் திரும்பிவராமல் அவரது அம்மா வீட்டிலேயே இருந்துவந்தார். 10.04.2018-ம்தேதி மாயவரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் என் தம்பி செந்தில், அம்மா கன்னிகா, அக்காக்கள் ருபா, சுதா மற்றும்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு R. G 20/04/18

Signature of the Officer-in-Charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் R. Rathinavelu 20.04.18

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

21-04-18

Name: பெயர் R. ரத்தினவேலு
Rank: நிலை .................... No. எண் ..........
காவல் துணைக் கண்காணிப்பாளர்
லஞ்ச ஒழிப்புத் துறை
நாகப்பட்டினம்.

தங்கை R.செந்திலா ஆகியோர்கள் மீது வரதட்சணை கொடுமை புகார் கொடுத்திருந்தார். அதனால் மயிலாடுதுறை அனைத்து மகளிர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் ராணி அவர்கள் 10.04.2018-ம்தேதி நள்ளிரவு 2.00 மணியளவில் எங்கள் வீட்டிற்கு வந்து ருபா மற்றும் செந்திலாவை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார். மறுநாள் 11.04.2018-ம்தேதி காலை நான் மகளிர் காவல் நிலையம் போனேன். அப்போது காவல் நிலையத்தில் இருந்த ருபா, செந்திலாவை வெளியே விடவும், முதல் செட்டில்மெண்ட் ராஜலெட்சுமிக்கு செய்யவும், ருபாய் 10,000/- என்னிடம் கேட்டு இன்ஸ்பெக்டர் ராணி வாங்கிகொண்டார். முதல் செட்டில்மெண்டாக ராஜலெட்சுமிக்கு 10½ பவுண் நகை, அனைத்து சீர்வரிசைகள், டுவீலர் மற்றும் இதர சாமான்கள் அன்று மதியம் நாங்கள் கொடுத்தவுடன் ருபா மற்றும் செந்திலாவை இரண்டு நாள் கழித்து வருமாறு எழுதி வாங்கிகொண்டு வெளியே விட்டார். இரண்டு நாள் கழித்து வரும்போது எலக்ட்ரிக்கல் ரைஸ் குக்கர் வாங்கி வருமாறு இன்ஸ்பெக்டர் ராணி என்னிடம் சொன்னார். இதற்கிடையில் எனது அம்மா, இரண்டு அக்கா, தம்பி மற்றும் தங்கை ஆகியோருக்கு முன் ஜாமீன் எடுப்பதற்காக சென்னை உயர்நீதிமன்றம் சென்றுவிட்டேன். பின்னர் நேற்று 19.04.2018-ம்தேதி இன்ஸ்பெக்டர் ராணி கேட்டபடி நான் எலக்ட்ரிகல் குக்கரை வாங்கிகொண்டு மயிலாடுதுறை அனைத்து மகளிர் காவல் நிலையம் சென்று இன்ஸ்பெக்டர் ராணி அவர்களிடம் கொடுத்தேன். அதனை அவர் வாங்கிகொண்டு அப்போது இரண்டாவது செட்டில்மெண்டான மீதி 12½ பவுண் நகையை ராஜலெட்சுமிக்கு திருப்பி கொடுத்து பிரச்சினையை நல்லபடியாக செட்டில்மெண்ட் செய்வதற்கும், வழக்கை உங்கள் குடும்பத்திற்கு சாதகமாக முடிப்பதற்கும் எனக்கு ருபாய் 30,000/-ஐ நாளை 20.04.2018 அன்று எனக்கு அரையபுரம் கோவில் தீமிதி பாதுகாப்பு பணி உள்ளதால் நாளை மறுநாள் 21.04.2018-ம்தேதி காலை கொண்டுவந்து தருமாறு கூறினார். அவர் கேட்ட லஞ்சப் பணத்தை கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே தொடர்ந்து லஞ்சமாக பணம் மற்றும் பொருள் கேட்டு தொந்திரவு செய்யும், மயிலாடுதுறை அனைத்து மகளிர் இன்ஸ்பெக்டர் ராணி அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் எனது குடும்பத்ினர் மீது மயிலாடுதுறை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட குற்ற எண்.5/2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை நகல் மற்றும்

19.04.2018 அன்று MSJ Home appliances, Mayiladuthurai என்ற கடையில் குக்கர் வாங்கியதற்கான ரீசீது நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். இப்படிக்கு (ஆங்கிலத்தில் ஒப்பம்) R.Guhan 20.04.2018.

இன்று 20.04.2018 ந்தேதி 12.00hrs மேற்படி புகாரைப் பெற்று நாகப்பட்டினம் V&AC குற்ற எண்ணில் பதிவு செய்ய வேண்டி முன் விசாரணை செய்து, அதன்படி நாகப்பட்டினம் V&AC குற்ற எண்.02/18, U/s. 7 of the Prevention of Corruption Act, 1988 ன்படி 20.04.2018 ந்தேதி 18.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன்.

I am submitting the Original F.I.R, along with the complaint and its enclosures, to the Hon'ble Court of the Chief Judicial Magistrate/Special Judge, Nagapattinam and the copies of the F.I.R. to all other concerned Officials.

R. Rathinavalli 20.04.18.
(R.RATHINAVALLI)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Nagapattinam.